# அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு ஐக்கிய மக்கள் சக்தியினால் கொழும்பில் பாரிய போராட்டம்!

## போராட்டக்காரர் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைத் தாக்குதல்

வற் வரி விதிப்பு உள்ளிட்ட அரசாங்கத்தின் மக்களைப் பாதிக்கின்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்பினைத் தெரிவித்து, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் இன்று கொழும்பில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வற் வரி அதிகரிப்பு, மருந்துப் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இவற்றுக்கு எதிர்ப்பினை வெளியிட்டு, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு நகரமண்டபத்திற்கு முன்பாக ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் போரணியில், நாடளாவிய ரீதியாக இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்ஜித் மத்துமபண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.மரிக்கார், ஹர்ஷன ராஜகருணா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், ஹிருணிகா பிரேமசந்திர உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, கொழும்பு புறநகர் பகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சக்தியினால் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தப் போராட்டத்துக்கு முன்பதாகவே பொலிசாரால் சமர்ப்பிக்கப்பட்ட



மனுக்களுக்கு அமைய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியமான 16 உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றம் இன்று தடை உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

குறிப்பாக மாளிகாவத்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முஸ்லிம் பொது 2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2055 தை 16 செவ்வாய்க்கிழமை 30.01.2024 கதிர் 168

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



# பெண் ஊழியர்களைத் துஷ்பிரயோகம் செய்த நாடாளுமன்றப் பணியாளர்கள் மூவர் சிக்கினர்

நாடாளுமன்றத்தில் இரண்டு பெண் ஊழியர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானார்கள் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற கனிஷ்ட நிலைப் பணியாளர்கள் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் அதிகாரிகள் அண்மையில் நாடாளுமன்ற வளாகத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் மேற்படி நாடாளுமன்றப் பணியாளர்கள் கைதாகியுள்ளனர்.

கைதான மூன்று சந்தேக நபர்களும் விசாரணைகளின் பின்னர் கடுவலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (அ)

# சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு பெப்ரவரி முதல் தொடர் போராட்டமாம்!

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்றைய தினம் சுகாதார ஊழியர்கள், கொழும்பைச் சூழவுள்ள வைத்தியசாலைகளுக்கு முன்பாக பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதார அமைச்சின் முன்பாகவும் பல சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

அரசாங்க வைத்தியர்களுக்கு வழாங்கப்படும் முப்பத்தைந்தாயிரம் ரூபா கொடுப்பனவை தங்களுக்கும் வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

தங்களது போராட்டத்தை நிறைவுறுத்திய அவர்கள், தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் எதிர் வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் தொடர்ச்சியாகப் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

# பிரதமரைப் பதவியிலிருந்து நீக்கிய விவகாரம் மைத்திரிபால, மஹிந்தவுக்கு நீதிமன்று உத்தரவு



நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிரிசேன கடந்த 2018 ஆம் ஆண்டு, அப்போது பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியில் இருந்து நீக்கியிருந்தார்.

குறித்த சம்பவத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், குறித்த மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.


அத்துடன் இது தொடர்பாக நீதிமன்றில் சாட்சியமளிக்குமாறு பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்த ஒருவர் வைத்தியசாலையில்

கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்ட பேரணியின் போது காயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப்பதற்காக கொழும்பு பொது நூலகத்திற்கு அருகாமையில் பொலிஸார் பல முறை நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

# சுதந்திர தின ஒத்திகை பரசூட் வீரர்கள் விபத்தில்!



சுதந்திர தின ஒத்திகையில் பங்கேற்ற பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 4 பேர் பரசூட் ஒத்திகையின் போது 2 ▶

# தனியாருடன் இணைந்து விவசாயிகளிடம் சோளம் கொள்முதல் செய்யப்படவுள்ளது

இம்முறை தனியாருடன் இணைந்து விவசாயிகளிடமிருந்து சோளம்கொள்முதல் செய்யப்படவுள்ளதாக தேசிய உணவு ஊக்குவிப்பு சபையின் தலைவர் பாலிந்த சாகர தெரிவித்துள்ளார்.

அதன்படி, சோளத்தை கொள்முதல் செய்வதில் அனுபவம் வாய்ந்த கோர்ன் கிங்டம் கொம்பெனி லிமிடெட் என்ற தனியார் நிறுவனம், அரசுடன் இணைந்து சோளத்தை கொள்முதல் செய்யவிருக்கின்றது. அநுராதபுரம், மொனறாகலை, அம்பாந்தோட்டை, பதுளை ஆகிய மாவட்டங்களில் இருந்து சுமார் 15,000 ஹெக்டெயர் பரப்பளவில் சோளம் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சோளத்தை 140 ரூபா என்ற விலைப்படி விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, அவ்விடத்திலேயே அவர்களுக்கான பணத்தை கொடுக்க 2 ▶

# யாழில் பொலிசார் மீது தாக்குதல்! ஐந்துபேர் கைதுசெய்யப்பட்டனர்

யாழ்ப்பாணத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது சில நபர்கள் இணைந்து சரமாரியாக தாக்குதல் நடத்திய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

ஆனைக்கோட்டைச் சந்தி மற்றும் குளப்பிட்டிச் சந்திகளுக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று (29) இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் குழுவாக நின்றவர்களைச் சோதனையிட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் முயன்றுள்ளனர். இதன்போதே பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் ஐந்து பேர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களின் காலணிகளுக்கான வவுச்சர் காலம் நீடிக்கப்பட்டுள்ளது

பாடசாலை மாணவர்களுக்கு அரசு வழங்கும் காலணிகளுக்கான வவுச்சர் அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வவுச்சர் அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் பெப்ரவரி முதலாம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததுஇ எனினும் குறித்த காலணிகளின் விநியோகஸ்தர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே வவுச்சர் அட்டைகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ரெத-62)

# இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் விரைவில் அமுலாக ஏற்பாடுகள்!

## அமைச்சர் பந்துல குணவர்தன



இணையப் பாதுகாப்புச் சட்டமூலத்தை தாமதமின்றி அமுல்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இணையப்பாதுகாப்புச்சட்டமூலம், சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தாது. குறுகிய நோக்கங்களுக்காகவே இவ்வாறு கூறப்படுகின்றது. பொதுமக்களுக்கு தீங்கு விளைவிப்பதை தடுப்பதற்கே இந்தச் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ளது.

சமூக ஊடகங்களை வன்முறை தூண்டும் வகையில் பயன்படுத்தக் கூடாது. மத உணர்வு, மதங்களுக்கு இடையே மோதல், சிறுவர் துஷ்பிரயோகம், மிரட்டல், வன்முறை, பாலியல் துன்புறுத்தல் போன்ற, செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் இந்த சட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

உலகின் பிற வளர்ந்த நாடுகள் பின்பற்றும் நடைமுறைகள் மற்றும் தரநிலைகளின்படி இந்த சட்டமூலத்தை நாம் தயாரித்துள்ளோம்.

மேலும், இந்த இணைய பாதுகாப்புச் சட்டம் தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்த பொது பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர், சர்வதேச ரீதியில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களுக்கு ஏற்ப தேவையான திருத்தங்களைச் செய்வதற்கும் இணங்கியுள்ளார்.

சட்டம் நிறைவேற்றப்பட்டு, நடைமுறைப் படுத்த தேவையான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கூடிய விரைவில் இதனை நடைமுறைப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் மூலம் இந்த நாட்டிலுள்ள அனைத்து நிராயுதபாணிகளும் அச்சம் இன்றி சுதந்திரமாக வாழ்வதற்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது, என அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.




### அரசாங்கத்தின் மக்கள் .......

மையவாடி தொடக்கம் பிரதீபா மாவத்தை, சத்தர்ம மாவத்தை, ஜயந்த வீரசேகர மாவத்தை, மில்டன் பெரேரா மாவத்தை, ஜ/ம்மா சந்தி ஊடாக சங்கராஜ மாவத்தை வரையான பகுதிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்படுவதற்கு இவர்களுக்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் இன்று நடைபெற்றது.

எதிர்ப்புப்பேரணியானது நகரசபை மண்டபத்திலிருந்து முன்னோக்கிச் சென்ற நிலையில், பொது நூலகத்திற்கு முன்பாக பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியும், நீர்த்தாரைப் பிரயோக வாகனங்களைக் கொண்டும் பேரணியை முன்னோக்கி நகராமல் தடுக்க முற்பட்டனர்.

எனினும், போராட்டக்காரர்கள் முன்னோக்கி நகர முற்பட்டபோது, பாதுகாப்புத் தரப்பினரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

### சுதந்திர தின ஒத்திகை.......

கீழே விழுந்து காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒத்திகையின் போது வானத்தில் இரண்டு பரசூட்கள் மோதி விபத்துக்குள்ளானதாகவும், விபத்தில் விமானப்படையின் இரண்டு பரசூட் வீரர்களும், இராணுவத்தின் இரண்டு பரசூட் வீரர்களும் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### தனியாருடன் இணைந்து......

திட்டமிடப்பட்டுள்ளது என கோர்ன் கிங்டம் நிறுவனத்தின் தலைவர் கோவிந்தராஜ் பிரபாஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் சோளம் கொள்வனவு ஆரம்பிக்கப்படும் என தேசிய உணவு ஊக்குவிப்பு சபை தெரிவித்துள்ளது. (ரெத-61)

# இளம் பெண்ணின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு

## வவுனியாவில் பரபரப்பு

வவுனியா, குருமன்காடு, கோவில் வீதி பகுதியில் கிணற்றிலிருந்து 29 வயதுடைய இளம் பெண்ணின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா பாலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண்ணைக் காணவில்லை என வீட்டார் தேடியபோது வீட்டிலுள்ள கிணற்றில் அவர் சடலமாகக் காணப்படுள்ளார்.

இதையடுத்து வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

29 வயதுடைய ஜெனிற்றா சயந்தன் என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்த மரணம் தற்கொலையா அல்லது எதிர்பாராது இடம்பெற்றதா அல்லது கொலையா எனப் பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன் தடவியல் பிரிவினரின் உதவியையும் பொலிஸார் நாடியுள்ளனர்.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# SLARDAR இன் Grand Motorsports Gala நிகழ்வில் Nippon Paint இன் உஷான் பெரேராவுக்கு விருது!







**SLARDAR** இன் **Grand Motorsports Gala** நிகழ்வில் ளுடு புவு கார்களில் ஆண்டின் ஆளுமையான ஓட்டுநர் என்ற விருதினை வென்ற **Nippon Paint** இன் வர்த்தக நாமத் தூதுவரான உஷான் பெரேராவுக்கு அந்த நிறுவனம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

**SLE** நிசான் மார்ச் 1000 உஉ பிரிவில் சிறந்த ஓட்டுநர் விருதை வென்ற அதீஷா கித்வித்துக்குகும் தமது சிறப்பான பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, நிகழ்வின் பிரதான அனுசரணையாளர்களான **Nippon Paint**, இவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளை பெருமையுடன் கொண்டாடுவதாகவும் குறி-ப்பிட்டுள்ளது.

## போதைப் பழக்கத்துக்கு ஆளான நபரால் அமெரிக்காவில் இந்திய மாணவர் கொலை





அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தின் லித்தோனியா நகரில் போதைப் பழக்கத்துக்கு உள்ளான நபரால் 25 வயதான இந்திய மாணவர் கொல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

ஹரியாணாவைச் சேர்ந்த சைனி (25) பி.டெக் பட்டப்படிப்பை நிறைவு செய்துவிட்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன் எம்பிஏ பயில்வதற்காக அமெரிக்கா சென்றுள்ளார். அண்மையில் எம்பிஏ படிப்பை அவர் நிறைவு செய்துள்ளார்.

ஜோர்ஜியா மாகாணத்தின் லித்தோனியா நகரிலுள்ள உணவு அங்காடியில் பகுதி நேர ஊழியராகவும் சைனி பணியாற்றி வந்துள்ளார். அங்காடியின் அருகே ஆதரவற்றவராக சுற்றித்திரிந்த ஜுலியன் போல்க்னர் என்பவருக்கு உதவும் நோக்கில் அவ்வப்போது அங்காடியில் தங்கிக்கொள்ள அவர் அனுமதித்துள்ளார். அவர் கேட்கும் நேரங்களில் எல்லாம் சிப்ஸ், தண்ணீர் உள்ளிட்டவற்றையும் வழங்கியுள்ளார்.

இந் நிலையில் கடந்த 16 ஆம் திகதி நள்ளிரவில் அங்காடிக்குள் நுழைந்த ஜுலியனை, பாதுகாப்பின் காரணமாக வெளியேறுமாறும் இல்லையென்றால் பொலிஸாரை அழைப்பதாகவும் சைனி தெரிவித்துள்ளார்.

இந்த வேளையில், போதைப்பழக்கத்துக்கு அடிமையானவரான ஜுலியன் சுத்தியலால் சைனியின் தலையில் சுமார் 50 முறை கடுமையாக தாக்கியுள்ளார். இச்சம்பவம் அங்குள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. சம்பவ இடத்துக்கு பொலிஸார் வந்தபோது சைனியின் உடலருகே ஜுலியன் நின்றுகொண்டிருந்தாகவும் அங்கிருந்து வரும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

## செந்நெல் சாஹிறா வித்தியாலயத்தில் பாராட்டு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்



(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

செந்நெல் மறுமலர்ச்சியின் இரண்டாவது கட்டச் செயலமர்வு, செந்நெல் சாஹிரா மஹா வித்தியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

செந்நெல் மறுமலர்ச்சி செயற்திட்டத்தின் கீழ் அப்பாடசாலை மாணவர்களுக்கு பகுதிநேர வகுப்பில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவ-தற்காக பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ள-ப்பட்டு வருகின்றன.

நேற்று இடம் பெற்ற கூட்டத் தில் செந் நெல் மறு மலர்ச்சியினால் நடத்தப்பட்ட பகுதி நேர வகுப்பில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்களிலும் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவச் செல்வங்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சமூக சேவைகளை முன்னெடுத்து வருகின்ற ஆஷிக், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான், பகுதிநேர ஆசிரியர் தஸ்லீம், பாடசாலையினுடைய பிரதி அதிபர் முபாரக் அலி என பலரும் கலந்துகொண்டனர்.

வர்ம்முற்றம்
Face of Jaffna
கறுவா, சந்தனம், கராம்பு, கோப்பி, கொக்கோ, மிளகு ஆகிய மரக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளன.
076 443 8620

551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மாலைதீவு அதிபரான முகமட் மூயிஸ்க்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் – எதிர்க்கட்சி திட்டம்

மாலைதீவு அதிபர் முகமட் மூயிஸ்க்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர, அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி திட்டமிட்டுள்ளது.

மாலைதீவின் புதிய அதிபர் முகமட் மூயிஸ் அமைச்சரவையில் 4 புதிய அமைச்சர்கள் நியமனப் பரிந்துரைக்கு ஒப்புதல் பெறுவதற்கான வாக்கெடுப்பு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அப்போது, ஆளும் 'மாலைதீவு முற்போக்குக் கட்சி-தேசிய மக்கள் காங்கிரஸ் (பிபிஎம்-பிஎன்சி)' கூட்டணி மற்றும் எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி (எம்டிபி) உறுப்பினர்களிடையே மோதல் ஏற்பட்டு, அவை முடக்கப்பட்டது. அந்தக் காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவலாக பகிரப்பட்டு, வெகுவாக விமர்சிக்கப்பட்டன.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற அவைத் தலைவர் முகமட் அஸ்லாம் மற்றும் அவைத் துணைத் தலைவர் அகமட் சலீம் ஆகியோருக்கு எதிராக 23 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆளும் பிபிஎம் - பிஎன்சி கூட்டணி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பித்தது.

இந்நிலையில், அதிபர் முகமட் மூயிஸ்க்கு எதிராக ஜனநாயகவாதிகள் கட்சியுடன் கைகோர்த்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி திட்டமிட்டுள்ளது.


இது தொடர்பான முடிவு நேற்று நடைபெற்ற எம்டிபி கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தில் ஒருமித்து எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

87 உறுப்பினர்களைக் கொண்ட மாலைதீவு நாடாளுமன்றத்தில், அதிபர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மான நடைமுறையை எளிதாக்கும் வகையில் விதிகள் திருத்தியமைக்கப்பட்டிருந்தன. அந்த விதிகளின் அடிப்படையில், அதிபரை 56 வாக்குகள் கொண்டு பதவியிலிருந்து நீக்கலாம்.

அதன்படி, எம்டிபி-யின் 43 எம்.பி.க்கள் மற்றும் ஜனநாயகவாதிகள் கட்சியின் 13 எம்.பி.க்கள் சேர்ந்து அதிபருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு 56 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'ஜனநாயகவாதிகள் கட்சியுடன் இணைந்து, அதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவர எங்களுக்குப் போதிய ஆதரவு கிடைத்துள்ளது. ஆனால், தீர்மானத்தை அவையில் இன்னும் சமர்ப்பிக்கவில்லை' என்று எம்டிபி கட்சி எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், 56 உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேறும் சூழலில், அதிபர் முகமட் மூயிஸ் பதவியை இழக்க நேரிடும்.



மாலைதீவில் அதிபர் தேர்தல் கடந்த ஆண்டு செப்டம்பரில் நடைபெற்றது. அத்தேர்தலில் இந்தியாவுடன் நட்பாகச் செயல்பட்டு வந்த அதிபர் முகமட் சோலியைத் தோற்கடித்து, மாலைதீவின் புதிய அதிபராக முகமட் மூயிஸ் கடந்த நவம்பரில் பதவியேற்றார்.

சீனாவின் ஆதரவாளராகக் கருதப்படும் அவர், 'இந்தியப் படைகள் மாலைதீவிலிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும்' என்று பதவியேற்றவுடன் வலியுறுத்தியிருந்தார். அதற்கான காலக்கெடுவும் அவரால் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (04)

## ஜோர்டானிலுள்ள அமெரிக்க ராணுவத் தளம் மீது தாக்குதல் 3 வீரர்கள் மரணமானதாகத் தகவல் – பதற்றம் அதிகரித்தது!



ஜோர்டானிலுள்ள அமெரிக்க ராணுவ தளத்தில் ஈரான் ஆதரவு பெற்ற ஆயுதக் குழு நடத்திய தாக்குதலில் 3 வீரர்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதையடுத்து, அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையிலான பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

ஈராக் எல்லையையொட்டிய ஜோர்டானின் ருக்பான் பகுதியில் அமெரிக்காவின் ராணுவத் தளம் ஒன்று அமைந்துள்ளது. 'டவர் 22' என்றழைக்கப்படும் அந்த தளத்தில் வெடிகுண்டு பொருத்தப்பட்ட ஆளில்லா விமானம் மூலம் ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், அங்கு உறங்கிக் கொண்டிருந்த 3 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்ததோடு, 34 பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்க வான்பாதுகாப்பு அரணையும் மீறி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குலை ஈரான் ஆதரவுக் குழுவினர் நடத்தியதாக அமெரிக்க உளவுத் துறையினர் கூறினர். அதனை உறுதிப்படுத்தும் வகையில், ஈராக்கில் செயல்பட்டு வரும் 'இஸ்லாமிய போர்ப்படை' என்ற அமைப்பு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது.

இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். தாக்குதலுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நேரத்தில் உரிய விதத்தில் பதிலடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாயிட் அஸ்டினும், 'அமெரிக்கப் படையினரையும், நாட்டின் நலனையும் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ராணுவம் மேற்கொள்ளும்' என்று உறுதியளித்தார்.

ஜோர்டான அரசும் இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளது. இது தொடர்பான விசாரணையில் அமெரிக்க அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக அந்த நாட்டு அரசு உறுதியளித்தது.

இதற்கிடையே, ஈராக்கிலிருந்து ஜோர்டானிலுள்ள அமெரிக்க ராணுவதளத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக தங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில், எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தங்களது நிலைகளில் இருந்து ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவினர் வெளியேறிவருவதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸாவில் நடைபெறும் போரில் ஹமாஸ/க்கு தங்களது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவினர் இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவின் ராணுவ நிலைகளைக் குறிவைப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில், ஜோர்டானிலுள்ள அமெரிக்க ராணுவதளத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 3 வீரர்கள் உயிரிழந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும், ஜோர்டானிலுள்ள அமெரிக்க ராணுவதளத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் தங்களுக்குத் தொடர்பிருப்பதாகக் கூறப்படுவதை ஈரான் மறுத்துள்ளது.

இது குறித்து ஐ.நா.வுக்கான ஈரான் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜோர்டானில் அமெரிக்க ராணுவ நிலை மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலுக்கும், ஈரானுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அந்தப் பிராந்தியத்தில் செயல்படும் ஆயுதக் குழுவினருக்கும், அமெரிக்கப் படையினருக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நிலவி வருகிறது. அதன் எதிரொலியாக, இரு தரப்பினரும் அவ்வப்போது பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வருகின்றனர். தற்போது நடத்தப்பட்டுள்ள தாக்குதலும் அந்த வகையைச் சேர்ந்ததே, என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

## சோமாலிய கடற்கொள்ளையர்களிடமிருந்து ஈரான் மீன்பிடிப் படகை மீட்ட இந்தியப்படை



சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் இருந்து ஈரான் மீன்பிடிப் படகை இந்திய போர்க்கப்பல் மீட்டுள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

இஸ்ரேல் - ஹமாஸ் தரப்புகளுக்கு இடையே நடைபெற்று வரும் போரில் இஸ்ரேலுக்கு தேவையான ஆயுதங்களை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் வழங்கி வருகின்றன. ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஈரான் மறைமுகமாக ஆயுத உதவிகளை வழங்கி வருகிறது.

ஈரான் ஆதரவுடன் செயல்படும் யேமனைச் சேர்ந்த ஹவுதி தீவிரவாதிகள், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் சரக்கு கப்பல்கள், போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஹவுதி தீவிரவாதிகள் மட்டுமன்றி, சோமாலியாவை சேர்ந்த கடற்கொள்ளையர்களும் சரக்கு கப்பல்களை சிறைபிடித்து வருகின்றனர். ஹவுதி தீவிரவாதிகள், சோமாலிய கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய கடற்படையின் 10 போர்க்கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களில் மட்டும் பல்வேறு சர்வதேச சரக்குகப்பல்களை இந்திய போர்க்கப்பல்கள் பத்திரமாக மீட்டுள்ளதாகவும், இதன் காரணமாக சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பு பல மடங்கு உயர்ந்து வருகிறது என்றும் இந்தியத் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

இந்த சூழலில் சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் இருந்து ஈரான் மீன்பிடிப் படகை இந்திய போர்க்கப்பல் பத்திரமாக மீட்டு உள்ளதாக இந்தியக் கடற்படையின் சமூக வலைதளப் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏடன் வளைகுடா பகுதியில் சென்று கொண்டிருந்த ஈரானிய மீன் பிடி படகை சோமாலியாவை சேர்ந்த கடற்கொள்ளையர்கள் சிறைப் பிடித்தனர். அந்த மீன்பிடிப் படகில் இருந்த 17 மீனவர்களை பிணைக்கைதியாக்கி சோமாலிய எல்லைப்பகுதிக்கு படகை செலுத்திச் சென்றனர்.

இது தொடர்பான தகவல் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ்சுமித்ரா போர்க்கப்பலுக்கு கிடைத்தது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற இந்தியப் போர்க்கப்பல், சோமாலிய கடற்கொள்ளையர்களை விரட்டியடித்தது. ஈரான் மீன்பிடி படகு,17 மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர், என்று அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# மகாத்மா காந்தியின் 76 வது சிரார்த்த தினம் யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டது



மகாத்மா காந்தியின் 76 வது சிரார்த்த தின நிகழ்வு யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் காந்தி சேவா நிலையத்தினரின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை முன்றலில் இடம்பெற்றது

குறித்த நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், யாழ் மாநகர சபை ஆணையாளர், காந்தி சேவா நிலைய உறுப்பினர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது "காந்தியம்" காலாண்டுப் பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. பத்திரிகையை யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரி வெளியிட்டு வைக்க யாழ் மாநகர சபை ஆணையாளர் பெற்றுக் கொண்டார். (O1)

# சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரியில் இரண்டாவது கட்டமாக நேர்முகத் தேர்வு



(எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரியில் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

அதில் விவசாய உயர் தேசிய டிப்ளோமா உற்பத்தி தொழிநுட்பவியல் பாடநெறிக்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வும் பரீட்சையும் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்றன. இருந்த போதிலும் உயர்தரப் பரீட்சை காரணமாக பல மாணவர்கள் அவற்றுக்குத் தோற்றமுடியாமல் போயிருந்தது.

பாடநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு கல்லூரியின் விவசாய டிப்ளோமா பகுதித்தலைவர் வரகுனராகவனின் தலைமையில் விரிவுரையாளர்களைக் கொண்டு நேற்று திங்கட்கிழமை இரண்டாம் கட்ட நேர்முக தேர்வும் பரீட்சையும் நடைபெற்றன.

# மருத்துவ பீட பீடாதிபதி சதானந்தன் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றார்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி கலாநிதி தில்லைநாதன் சதானந்தன் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

இவர் மருத்துவ கற்கைகள் ஆராய்ச்சியியல் ( Medical education and research) துறையில் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவ கற்ககைகள் மற்றும் ஆராய்ச்சியியல் கலாநிதி தில்லைநாதன் சதானந்தன் சமாதானத்திற்கான மருத்துவம் "Peace Medicine: A Health Care Concern" என்ற நூலை அண்மையில் வெளியீட்டுள்ளார்.

இவர் அகில இலங்கை சைவ பண்டிதர் சபையின் சைவ பண்டிதர், சைவப் புலவர் கல்விப் பணிப்பாளர் மண்டூர் தில்லைநாதனின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் 75 ஆவது குடியரசுத்தினத்தையொட்டி யாழில் இந்தியக் கலைஞர்களின் பாரம்பரிய நடனம்

இந்தியாவின் 75 ஆவது குடியரசுத்தின கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக யாழ் இந்திய துணைத் தூதரகமும் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு வரும் பெப்ரவரி முதலாம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், இந்தியக் கலைஞர்களின் இந்தியாவின் பாரம்பரிய நடன நிகழ்வுகளான ஒடிசி, கதகளி, சத்ரியா மற்றும் மணிப்புரி முதலானவை இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுக்கான நுழைவுக்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது எனவும், அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பதாகவும் யாழ் இந்தியத் துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.




# மாணவி மின்ஹா ஜலீலின் பசுமைப்புரட்சித்திட்டம்



(நூருல் ஹுதா உமர்)


நாடெங்கிலும் உள்ள 10 இலட்சம் மாணவர்களுக்கான பசுமைப் புரட்சி விழிப்புணர்வு வேலைத் திட்டமானது, சம்மாந்துறை கல்வி வலய கமு.சது. அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி பயிலும் மினிமினி எனும் புனைப்பெயர் கொண்ட மின்ஹா எனும் மாணவியினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

அந்த வகையில், சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்திலும் இன்றைய தினம் குறித்த விழிப்புணர்வு வேலைத்திட்டம் நடைபெற்றது. குறித்த விழிப்புணவு செயற்பாட்டின்போது பூகோளமயமாதல், பொலித்தீன் பாவனை, பிளாஸ்டிக் பாவனை மற்றும் உலக வெப்பநிலை ஆகியவற்றால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பில் மாணவர்களுக்கான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக நாடெங்கிலும் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித மூளையில் சிப்பினை பொருத்திப் பரிசோதனை எலான் மஸ்க்கின் நிறுவனம் ஆரம்பித்ததாக அறிவிப்பு

## மூளையையும் கணினியையும் இணைப்பது சாத்தியமாகும்!





நம் மூளையின் செயல்பாட்டில் பாதிப்பு ஏற்படும் போது அதைச் சரி செய்ய மூளையில் சிப் பொருத்தினால் என்ன நேரும்?

மருத்துவ உலகில் – குறிப்பாக, நரம்பியல் மருத்துவத்தில் பெரும் சவாலாக இருக்கும் நோய்களுக்குத் தீர்வு காணக் கூடியதாக இருக்கும்!

இந்தத் தேடலுக்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற முன் ஆயத்தப் பணிகளைத் தொடங்கியிருக்கிறது எலான் மஸ்கின் நியூராலிங்க் நிறுவனம்.

ஆம், நியூராலிங்க் நிறுவனம் தான் வடிவமைத்துள்ள எண்ணங்களைச் செயல்படுத்தும் வகையில் மூளைக்கும் கணினிக்குமான இன்டர்பேஸ் (BCI) இணைப்பை உருவாக்கும் வகையிலான சிப் ஐ மனிதனின் மூளையில் பொருத்தி சோதனையைத் தொடங்கியுள்ளது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் கட்டுப்பாடு நிர்வாகம் கடந்த ஆண்டு நியூராலிங்க் மனிதர்களைக் கொண்டு சோதனை செய்ய அனுமதி வழங்கிய நிலையில் தற்போது அச்சோதனை நடைபெற்றுள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் குரங்குகளை வைத்து இந்தச் சோதனையை நியூராலிங்க் நிறுவனம் செய்திருந்தது. தற்போது முதன்முறையாக மனிதருக்குப் பொருத்தப்பட்டுச் சோதனை நடைபெறுகிறது.

இதனை எலான் மஸ்க் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சோதனை தொடங்கியதாகவும், சிப் பொருத்தப்பட்டிருக்கும் அந்த நபர் உடல்நலன் தேறி வருவதாகவும் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நபரின் முதற்கட்ட மருத்துவ அறிக்கை, அவருடைய நியூரான் ஸ்பைக்குகள் நேர்மறையான அறிகுறிகளைக் காட்டுவதாகவும் எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

நியூராலிங்கின் முதல் தயாரிப்பின் பெயர் டெலிபதி (Telepathy) என மஸ்க் தெரிவித்துள்ளார். இந்த டெலிபதி உபகரணமானது எண்ணங்கள் மூலம் தொலைபேசி மற்றும் கணினியைக் கட்டுப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக கை, கால் போன்ற உறுப்புகளை இழந்தவர்களின் பயன்பாட்டுக்காக இந்த உபகரணம் வழங்கப்படும் என்றும் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

ஸ்டீபன் ஹோக்கிங்கால் வேகமாகத் தொடர்பு கொள்ள முடிந்திருந்தால் எப்படி இருக்கும்? அதை சாத்தியமாக்குவதுதான் எங்களின் இலக்கு, என்று மஸ்க் கூறியுள்ளார்.

ஏற்கெனவே மஸ்க் நியூராலிங் பற்றி பேசியபோது, நம் கபாலத்துக்குள் ஒரு பிட்பிட் (Fitbit) உபகரணம் போல் நியூராலிங் சிப் செயல்படும். மூளையின் செயற்பாட்டைத் தூண்டிவிடும். இதன்மூலம் ஆட்டிசத்தினால் பாதித்தோர் பலனடைவர். மனச்சிதைவு (schizophrenia) நோயால் பாதிக்கப்பட்டவர்களும் கூட பலனடையலாம், எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






## அட்டாளைச்சேனை பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் எம்.ஏ,சீ அகமது ஷாபீர் ஏற்பாட்டில், பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டம், தேசிய காங்கிரஸ் தலைவரும் அட்டாளைச்சேனை ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான ஏ.எல்.எம் அதாஉல்லா (நா.உ) அவர்களின் தலைமையில் நடைபெற்றது,

இதன்போது பிரதேச, பாடசாலைகள் சம்பந்தமான அபிவிருத்தி, மைதான அபிவிருத்தி உள்ளிட்ட இன்னும் பல முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது பற்றிய பல விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பிராந்தியத்தில் அண்மையில் ஏற் பட்ட வெள்ள அனர்த்தங்கள் தொடர்பாகவும் இனி வரும் காலங்களில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டதுடன், விவசாய நிலங்களை நிரப்புதல், களப்புகளை நிரப்புதல் ஆகியவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆறுகள், மற்றும் நீரேந்துப் பிரதேசங்களை முறையாகப் பராமரிப்பது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் பைஸால் காஸிம், அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எல்.மஜீட் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## மறைந்த பாடகி பவதாரணிக்கு கொழும்பில் அஞ்சலி நிகழ்வு !



மறைந்த பிரபல தென்னிந்திய பாடகியும், இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளுமான பவதாரணிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

‘இலங்கை தமிழ் கலைஞர்கள் மன்றத்தினால்‘ ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வானது, இசையமைப்பாளர் ஸ்ருதி பிரபா தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் போது பவதாரணியின் உருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2024 இல் வெளியிடப்பெற்றது.